# பெண்களும்
# நுண்நிதியும்

WE EFFECT

LAW & SOCIETY TRUST

இந்த ஆவணம் சட்டம்` மற்றும் சமூக நம்பிக்கை
நிதியத்திற்காக பினேந்திரி பெரேராவால் எழுதப்பட்டது

# இலங்கையில் பெண்கள்: சமூக பொருளாதார சூழமைவு

நடுத்தர வருமானமுடைய நாடு என்கின்ற ரீதியில் இலங்கை தேசிய மட்டத்தில் வறுமைக் குறைப்பினைக் கண்டுள்ளபோதிலும் வெவ்வேறு பிரதேசங்களில் மக்களில் அதிகமானோர் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் நிலையே இன்னும் காணப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டிற்கான
உத்தியோகபூர்வ வறுமைக் கோடு
(OPL)

**Rs.4,166**

மதிப்பிடப்பட்ட வறிய மக்களின் மொத்த
சனத்தொகை

**4.1%**

ஒன்பது மாவட்டங்கள் வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளமையினையும் 15 மாவட்டங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளமையினையும் ஒரு மாவட்டம் வறுமைக் கோட்டிற்குச் சமமாக இருப்பதனையும் அண்மைய புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

2020 மே மாதத்தில் வறுமைக் கோடு 5000.00 ரூபாவினை மிகைத்துக் காணப்பட்டது




பெண்கள் புள்ளிவிபரங்களில் புலப்படாத காரணத்தினாலும் தனிப்பட்ட வாழ்விலும் பொதுவாழ்விலும் அவர்கள் பாகுபாட்டிற்கு முகங்கொடுக்கின்ற காரணத்தினாலும் அவர்கள் இரட்டைச் சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

சமூகத்தின் வரையறை காரணமாகவும் கலாசார விதிமுறைகள் காரணமாகவும் கட்டமைப்பு ரீதியான சமத்துவமின்மைகள் காரணமாகவும் பெண்கள் பரந்த வ ீச்சிலான பிரதி கூலங ்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

இலங்கையின்
பெண்களின்
சனத்தொகை
தற்போது

**10,502,805**






எவ்வாறாயினும் மேற்குறிப்பிட்ட கிராமிய – பெருந்தோட்டப் பிரதேச வகைப்படுத்தலானது தரவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதுடன் இது இற்றைப்படுத்தப்படாத துமாகும். இதனால் இது நகரத்து ஜனத்தொகையினதும் நகர வறுமையினதும் வளர்ச்சியினைச் சரியான அளவுகளில் பிரதிநிதித்துவம் செய்யாது குறைவாகவே பிரதிநிதித்துவம் செய்கின்றது.

கிராமியப் பொருளாதாரங்களில் வறுமையில் வாழும் பெண்களின் வறுமையினை அகற்ற நுண்நிதி வழங்கல் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றது.

எவ்வாறாயினும் பெண்களை வலுப்படுத்தாமல் அவர்களை மேலும் மேலும் கடன் பொறிக்குள் தள்ளும் பொருள்முதல்வாத விதிகளின் காரணமாக இது இலங்கையில் பாதாகமான தாக்கங்களைக் கொண்டுள்ளது

ஒழுங்கமைக்கப்படாத நுண்நிதித் திட்டத்தின் காரணமாகக் கடன் சுமையில் வீழ்ந்து கிட்டத்தட்ட 200 பேர் தற்கொலை செய்துள்ளனர்
என்பதுடன் இவர்களில் பெரும்பான்மையானோர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
பரிகாரங்களை வழங்குவதற்கான சட்ட மற்றும் கொள்கை இடையீடுகள் குழப்பம் மிக்கனவையாகவும் தற்காலிகமானவையாகவும் உள்ளன.

கடனும் சிற்றின நிதியும் சமூக, பொருளாதார மற்றும் கலாசார நிலைமைகளில் ஏற்படுத்தியுள்ள விளைவுகளுக்குப் பெண்கள் முகங்கொடுப்பது பற்றிப் புரிந்துகொள்வதற்காக கிராமிய மற்றும் பெருந்தோட்டத் துறைகளைச் சேர்ந்த பெண்களின் மத்தியில் லோ அன்ட் சொசைட்டி டிரஸ்ட் பல நேர்காணல்களை நடத்தியுள்ளது. அவற்றுள் சில இங்கே கலந்துரையாடப்பட்டுள்ளன

## சமூக விதிகளும் பால்நிலைச் சமத்துவமின்மையும்

பெண்களே குடும்பத்தின் பிரதான பராமரிப்பாளர்களாக இருக்கின்றனர்.

பெண்கள் அவர்கள் வாழ்கின்ற சமூக, பொருளாதார மற்றும் கலாசாரச் சூழமைவு மூலமாகவும் மகள், மனைவி, தாய் மற்றும் சகோதரி என அவர்கள் வகிக்கு் வகிபாத்திரங்கள் மூலமாகவும் வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றனர்

இதற்கு மேலதிகமாகப் பெண்கள் பொருளாதார நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர்.

பல்வேறு பொறுப்புக்களைப் பெண்கள் வகிக்கும் அதேவேளை, அவர்களின் தன்னுரிமை, கௌரவம் மற்றும் சுயாதீனம் ஆகியவற்றுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இருக்கின்றது.

## பெண்களின் வேலையினையும் வாழ்வாதாரத்தினையும் மதித்தல

சில குறிப்பிட்ட தொழில்கள் “பெண்களின் தொழில்கள்” என முத்திரை குத்தப்பட்டவையாக உள்ளன.



பல்வேறு தொழிற்துறைகளுக்குப் பெண்கள் இன்றியமையாத பங்களிப்புக்களை வழங்கிய போதிலும் அவர்களின் கொள்கைகளும் ஊதியங்களும் தொழிலில் முன்னேறுவதற்கான வாய்ப்புக்களும் வரையறுக்கப்பட்டவையாக உள்ளன.

பெண்கள் கடினமான வேலை நிலைமைகளுக்கு முகங்கொடுக்கின்றனர் நீண்டநேர வேலை, துப்பரவேற்பாட்டு வசதிகள் இல்லாமை, தொழிலினால் ஏற்படும் நோய்கள் மற்றும் உடல் நலிவு, பாலியல் தொல்லைகள் மற்றும் அச்சுறுத்தல்கள் பெண்கள் கடினமான வேலை நிலைமைகளுக்கு முகங்கொடுக்கின்றனர் நீண்டநேர வேலை, துப்பரவேற்பாட்டு வசதிகள் இல்லாமை, தொழிலினால் ஏற்படும் நோய்கள் மற்றும் உடல் நலிவு, பாலியல் தொல்லைகள் மற்றும் அச்சுறுத்தல்கள்

**இவற்றிற்கு மேலதிகமாக, வீட்டிலுள்ள வயது முதிர்ந்தவர்கள், இளையவர்கள் மற்றும் அங்கவீனமானவர்களைப் பராமரிக்கும் பொறுப்பினையும் பெண்கள் கொண்டுள்ளனர்**

இது செலுத்தப்படவேண்டிய "பராமரிப்பு வழங்குவதற்கான செலவினை" குறைத்து ஆண்கள் பொருளாதார ரீதியாக மிகவும் முனைப்புப்பெற அனுமதிக்கின்றது. இவ்வாறான பராமரிப்பு வழங்கும் பணிகள் அரசினால் ஆதரவு வழங்கப்பட வேண்டிய கடமையாகும்.

இவ்வாறான வரையறைகள் பெண்களின் தொழில் ரீதியான மேம்பாட்டினைத் தடுத்து பெண்கள் முகங்கொடுக்கும் கலாசார ரீதியாக வேரூன்றியுள்ள சமத்துவமின்மையினை வலுப்படுத்துகின்றது.



## கல்விக்கான சமமற்ற வாய்ப்பு

இலங்கையில் இலவசக் கல்வி முறைமை இருந்தபோதும் இடத்துக்கிடம் அதன் தரமும் கல்விக்கு ஏற்படும் செலவும் மாறுபடுகின்றன.

சிரமங்கள் ஏற்படுகையில், முதலில் பாதிக்கப்படுவது பெண் பிள்ளைகளின் கல்வியே.

நீடித்த யுத்தங்கள், இடப்பெயர்வுகள் மற்றும் பாதுகாப்புக் கரிசணைகள் ஆகியவையும் பெண்களின் கல்வியினையும் முன்னேற்றத்தினையும் பாதிக்கின்றன.

## சுகவீனத்தினை முகாமைத்துவம் செய்தல் – பெண்கள் மீதான சுமை



**அரச மருத்துவ ஆளணியினரின் அல்லது மருத்துவ வசதிகளின் சமமற்ற புவியியல் ரீதியான விநியோகம**

பிரசவத்திற்கு முன்னரான மற்றும் பிரசவத்திற்குப் பின்னரான சுகாதாரம் உள்ளடங்கலாகப் பெண்களின் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரத்தில் பாதிப்பினை ஏற்படுத்தலாம.

கர்ப்பமும் பிள்ளைப்பேறும் "சுகவீனமாக" குறிப்பிடப்படுவதுடன் குடும்பத்திற்குப் பெண்கள் வழங்கும் பொருளாதாரப் பங்களிப்பினையும் அவை கட்டுப்படுத்துகின்றன.

## வீட்டில் ஆணாதிக்கம் – திருமணமும் குடும்பமும் பெண்கள் மீது ஏற்படுத்தும் தாக்கங்கள்

தொழில் வாய்ப்புக்காக ஆண்கள் கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு அல்லது வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்கையில் குடும்பப் பராமரிப்பாளர் பொறுப்பினையும் குடும்பத்தினைக் கவனிக்கும் முழுப்பொறுப்பினையும் பெண்களே ஏற்றுக்கொள்கின்றனர்.

பெண் ஒருவரினால் ஓரளவிற்குத் தன்னுரிமையினைப் பிரயோகிக்க முடியும் என்ற போதிலும் அப்பெண்ணின் சம்பளங்களையும் ஊதியங்களையும் செலவுகளையும் முகாமைத்துவம் செய்யும் ஆண் உறவினர் ஒருவரால் அவர் கட்டுப்படுத்தப்படுகின்றார். இது அப்பெண்ணின் நிதிச் சுயாதீனத்தினைக் கட்டுப்படுத்துகின்றது.

சீதனம் என்பது திருமணத்தின் பின்னர் தம் மகளுக்கான பாதுகாப்பின் வகையாகவே பெற்றோர்களால் கருதப்படுகின்றது. இது அதீத செலவுகளைத் தேவைப்படுத்தும் ஆணாதிக்க நடைமுறையாகும்.

தமது மகளிற்கு நிதிப் பாதுகாப்பினை அல்லது பௌதீகப் பாதுகாப்பினை வழங்க முடியாத குடும்பங்கள் அவர்களுக்குத் திருமணம் முடித்துக் கொடுக்கின்றன. இது பெண் பிள்ளைகள் பாடசாலையினை விட்டு இடைவிலகும்போதும் நடைபெறுகின்றது.

## பெண்களும் காணி உரிமையும்

வரலாற்று ரீதியாக, அரச காணிகள் மற்றும் பெருந்தோட்டக் காணிகள் தொடர்பான இலங்கையின் சட்டங்கள் பெண்களின் காணி உரிமைகளை மறுத்தே வந ்திருக்கின்றன.

இச்சட்டங்களும் ஆணாதிக்க நிர்வாக நடைமுறைகளும் ஆண்களுக்கு அதிக சிறப்புரிமைகளை வழங்கி பெண்களின் உரிமைகளைக் கட்டுப்படுத்தி அவர்களின் காணி உரித்தாண்மை, பரம்பரையுரிமை மற்றும் வாரிசுரிமை ஆகியவற்றிலும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன.

காணி அனுமதிப் பத்திரங்களை முன்விருப்பின்பேரில் வழங்குவது ஆண்களுக்குப் பரிவுகாட்டி யுத்தத்தினால் இடம்பெயர்ந்த பெண்கள் தங்களின் வாழ்வாதாரங்களுக்கு ஆதாரமாகக் காணிகளை அணுகுவதைக் கடினமானதாக்குகின்றது. ஆண்களில் இவ்வாறு தங்கியிருத்தலானது பாலியல் லஞ்சம் மற்றும் வன்முறை ஆகியவற்றினால் பெண்கள் பாதிக்கப ்படும் பாதிப்புறுநிலைக்கு அவர்களை ஆளாக்குகின்றது.

தமது வாழ்வாதாரங்களை மேம்படுத்த வங்கிகளில் இருந்து கடன்களைப் பெறுவதற்காகப் பிணையுறுதியாகப் பயன்படுத்தக் காணிகளைச் சொந்தமாகக் கொண்டிருக்கும் வாய்ப்புக்களைப் பெண்களுக்கு மறுப்பது பெண்களின் பொருளாதார ஆற்றல் மற்றும ் பாதுகாப்பினை மட்டுப்படுத்துகின்றது.

தமது அவசர நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பெண்கள் நுண்நிதியினை நாடுகின்றனர். இந்த நிறுவனங்கள் கடன்களை வழங்க ஆவணப்படுத்தல்களைத் தேவைப்படுத்துவதில்லை. ஆனால் பிணையுறுதியற்ற கடன்களுக்கு அதியுச்ச வட்டியினை அறவிடுகின்றன.

## பால்நிலை அடிப்படையிலான வன்முறை

நேர்காணப்பட்ட பலரைப் பொறுத்தளவில் வீட்டு வன்முறை என்பது அவர்களின் குடும்ப வாழ்வின் சாதாரண அங்கமாக இருக்கின்றது.

பாரம்பரிய ஆணாதிக்க எதிர்பார்ப்புக்கள் ஆண்களின் மீது சமூக அழுத்தத்தினை ஏற்படுத்தி அவர்கள் மீது மிகப்பெரிய எதிர்பார்ப்புக்களையும் வைக்கின்றது.

உளவியல் ரீதியான உதவியினைக் கோருவதற்கு ஆண்கள் ஊக்கப்படுத்தப்படுவதில்லை. அவர்கள் குறிப்பாக மன அழுத்தச் சூழ்நிலைகளில் இந்தத் தேவைகளை அடக்கிக்கொள்கின்றனர்.

மாறாக அவர்கள் ஈடுகொடுக்கும் பொறிமுறையாக மதுவருந்தல் மற்றும் வழமையாகக் குடும்ப உறுப்பினர்களை அச்சப்படுத்தல் போன்ற ஆண்களுக்கேயான செயல்களில் ஈடுபடுகின்றனர்.

கடன்களைச் சேகரிக்கும் ஆண்கள் கடன் பெற்ற பெண்களுக்கு நேரங்கெட்ட நேரத்தில் தொலைபேசி அழைப்புக்களை எடுப்பதன் மூலமும் அந்தரங்கத்திற்கான அவர்களின் உரிமையினைப் புறக்கணிப்பதன் மூலமும் பெண்களையும் அவர்களின் குடும்பங்களையும் அச்சுறுத்துகின்றனர். பெண்கள் தவணைக் கொடுப்பனவுகளைச் செலுத்தத் தவறுகையில் அல்லது கடன் வழங்கியவர்களுடனான கூட்டங்களுக்குச் செல்லாதபோதும் இந்த அச்சுறுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது.



ஆனால் குடும்பத்தின் ஆண் உறுப்பினர்கள் பெண்களின் நிதிக் கொடுக்கல் வாங்கல் பற்றிய அதிருப்தியினை வெளிப்படுத்த அவர்கள் மீது வன்முறையினைப் பிரயோகித்து வருகின்றனர்.

## அரசியலில் பெண்கள்: அவர்கள் எங்கே?

இலங்கைத் தேசிய பாராளுமன்றம் விகிதாசார ரீதியாகக் குறைவான பெண் உறுப்பினர்களையே தொடர்ச்சியாகக் கொண்டிருக்கும் நிலை காணப்படுகின்றது. 2019 இல் பெண் உறுப்பினர்களின் விழுக்காடு வெறும் 5.33% மட்டுமே.

உள்ளூராட்சி மட்டத்திலும் தேசிய அரசாங்கத்திலும் பெண்கள் அவர்களின் அரசியல் பங்கேற்பினைத் தக்கவைப்பதற்கான வாய்ப்புக்களில் சட்டவாக்க அமைப்புக்கள் முதலீடு செய்யல் வேண்டும்.

பெண்கள் முகங்கொடுக்கும் கடன் பொறியினை எதிர்ப்பதற்காக சமுதாய மட்டத் தீர்வுகளைப் பெறும் நோக்கில் தங ்களின் எதிர்ப்புக்களைத் தெரிவித்து பரிகாரத்தினையும் மாற்றத்தினையும் கோருவதற்கு நுண்நிதி நெருக்கடி பெண்களை பலவந்தப்படுத்தியுள்ளது. இது அவர்களின் அரசியல் செயற்பாட்டினைப் பிரதிபலிக்கின்றது.

எவ்வாறாயினும், உள்ளூராட்சி மட்டத்திலும் மகாண சபை மட்டத்திலும் பெண்கள் தங ்களின் அரசியல் பங்கேற்பினைத் தக்கவைக்க வேண்டுமாயின் மத்திய அரசாங்கம் தன்னிலையான கட்டுப்பாட்டினையும் ஆற்றலையும் பெண்களில் முதலீடு செய்யல் வேண்டும (நிதிஆற்றல் உள்ளடங்கலாக). ஆனால் இவை இச்சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்படுவதாகத் தென்படவில்லை.

இந்த ஆக்கம் சுவிடிஸ் சர்வதேச மேம்பாட்டு ஒத்துழைப்பு நிறுவனம் (Sida) மற்றும் வீபெக்ட் (We Effect) ஆகியனவற்றால் முழுமையாக நிதி அளிக்கப்பட்டதாகும். இங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்துக்களுடன் சீடா மற்றும் வ ீபெக்ட் அவசியம் உடன்பட வேண்டியதில்லை.